கூட்டணியாரே... கொஞ்சம் பதற்றத்தைக் குறையுங்கள்!

அரசியலில் நிலைப்பாடுகளோ கூட்டணிகளோ மாறுவது புதிதல்ல. ஆனால் அதற்கான குறைந்தபட்ச நியாயங்கள் ஏதும் இல்லாவிட்டால் அதைப் பச்சோந்தித்தனம் என்றோ ஆதாய அரசியல் என்றோதான் கூறமுடியும். இன்று த.வெ.க. கூட்டணியில் இருக்கும் கட்சிகளின் தலைவர்கள் ஒவ்வொரு நாளும் தி.மு.க.விற்கு எதிராக கூறிவரும் கருத்துக்கள் அறம் பிறழ்ந்த அரசியலின் வெளிப்பாடுகளாக இருக்கின்றன. காங்கிரஸ் தி.மு.க.விற்கு இழைத்த துரோகம் வெளிப்படையானது. தி.மு.க.வின் முதுகில் ஏறி சவாரி செய்து ஒரு நாடாளுமன்ற இடத்தையும் ஐந்து சட்ட மன்ற இடங்களையும் பெற்றுக்கொண்டு அடுத்த நாளே த.வெ.க.விடம் மண்டியிட்டு இடம்பிடித்தார்கள். அதற்கான கண்டனத்தை இந்தியா கூட்டணி யிலிருக்கும் பல கட்சிகளிலிடமிருந்து ராகுல் காந்தி சந்தித்து வருகிறார். தி.மு.க.விற்கு காங்கிரஸ் இழைத்த துரோகம் 'இந்தியா' கூட்டணியை சிதைத்துக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் இடதுசாரிகள் 'இந்தியா' கூட்டணியை உடைத்து த.வெ.க.விடம் போய் கூட்டணி வைக்கிறார்கள். ஆனால் அவர்கள் கேரளாவில் பினராயி விஜயனுக்கு எதிராக ராகுல் காந்திதான் அமலாக்கத்துறை சோதனையைத் தூண்டினார் என்று 'இந்தியா' கூட்டணி கூட்டத்தில் கொந்தளிக்கிறார்கள். அதாவது தமிழ்நாட்டில் த.வெ.க. காங்கிரஸ் கூட்டணி மந்திரி சபைக்கு ஆதரவு. கேரளத்தில் எதிர்ப்பு.

ஆனால் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப்போன காங்கிரஸைவிட சொல்லிவிட்டுப் போன கட்சிகளின் நடத்தைதான் கேலிக்கூத்தாக இருக்கிறது. தி.மு.க. தலைவர் அனுமதி அளித்தால்தான் த.வெ.க.விற்கு ஆதரவு அளிப்போம் என்றெல்லாம் பேசிய இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் இன்றைய கூட்டணி அமைச்சர் ஷாஜகான் அடுத்த ஐம்பது வருடத்திற்கு தி.மு.க. துடைத்து எறியப்படும் என்று பேசுகிறார். ஐம்பது வருடத்திற்கு மேலாக இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கை தாங்கிப்பிடித்து தமிழ்நாட்டில் அதனை ஒரு கட்சியாக உயிரோடு வைத்திருந்தது தி.மு.க. ஒவ்வொரு தேர்தலிலும் தி.மு.க. கூட்டணி உடன்படிக்கையை அறிவிக்கும்போது முதலில் இந்திய யூனியன் முஸ்லீம் லீக்குடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம்தான் முதலில் அறிவிக்கப்படும். கலைஞர் காலத்திலிருந்து கடந்த சட்டமன்றத் தேர்தல்வரை இதுதான் வழக்கம்.

ஆனால் 'அந்த சோஃபாவில்' அமர்ந்ததும் என்ன மாயமோ தெரியவில்லை அதன் மந்திரசக்தியால் நேற்றுவரை அவ்வளவு உற்ற நண்பர்களாக இருந்தவர்கள் மனம் பிறழ்ந்து நிலை தடுமாறி விதவிதமாய் பேசுகிறார்கள். ஒரு மாநிலத்தில் ஒரு மந்திரி பதவி இவ்வளவு மயக்கத்தை கொடுக்கும் என்றால் பாஜகவுடன் போய் கூட்டணி வைத்திருந்தால் மோடி தேசிய அளவிலான பதவிகளைக் கொடுத்திருப்பார்.

வி.சி.க. தலைவர் திருமாவளவன் ஒவ்வொரு நாளும் கூட்டணி குறித்து கூறிவரும் கருத்துக்கள் குழப்பமானவை மட்டுமல்ல அவர் ஏதோவொரு குற்றவுணர்வுக்கு ஆட்பட்டிருப்பது போல் தெரிகிறது. யாருடைய நிர்ப்பந்தத்தாலோ முரண்பட்ட கருத்துக்களை கூறிவருகிறார்.

சமீபத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய திருமாவளவன் பின்வரும் கருத்தை கூறினார். "த.வெ.க.வுக்கு நாங்கள் ஆதரவு அளிக்கும் விவகாரத்தில் திமுகவும் நெகிழ்வுத்தன்மையுடன் இருந்தது எங்களுக்கு அதிர்ச்சியாக இருந்தது. 'நம் கூட்டணிக்கு ஆதரவானவர்கள்தான் த.வெ.க.வை எதிர்த்து வாக்களித்துள்ளனர். எனவே, த.வெ.க.வுக்கு வி.சி.க., இடதுசாரிகள் ஆதரவு தரக்கூடாது' என தி.மு.க. கூறியிருக்க வேண்டும். ஆனால், தி.மு.க. அதை செய்யவில்லை.

'ஏற்கெனவே இடதுசாரிகள் வெளியில் இருந்து ஆதரவு அளிப்பதாக அறிவித்துள்ளன. திருமாவளவனும் அதே முடிவை எடுப்பது எந்த நேரத்திலும் பிரச்சினைதான். திடீரென ஆதரவை அவர் திரும்பப் பெற்றால் என்ன செய்வது. ஆதரவு அளிப்பதாக கூறிக்கொண்டே தி.மு.க. கூட்டணியில் தொடர்வதாக அவர் பேசுகிறாரா' என்றெல்லாம் தவெகவினர் கவலை கொண்டனர். த.வெ.க.வின் சந்தேகத்தை போக்கத்தான் ஆட்சி அமைக்க ஆதரவு கொடுத்தோம். அதற்கு பரிசாக த.வெ.க. அமைச்சரவையில் எங்களுக்கு இடம் தரப்பட்டது.

எந்த சூழ்நிலையில் தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் த.வெ.க. அரசிற்கு ஆதரவளிப்பதை தி.மு.க. தலைவர் ஏற்றுக்கொண்டார் என்பது அனைவருக்கும் தெரியும். எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில் தமிழ் நாட்டில் கவர்னர் ஆட்சி வந்துவிடும். அது பா.ஜ.க.வின் நேரடி ஆட்சியாக அமைந்துவிடும் என்ற சூழல் நிலவிய போது அதிக இடங்களை பெற்றிருந்த த.வெ.க. அரசிற்கு வெளியே இருந்து ஆதரவளிக்கும் முடிவிற்கு தி.மு.க. தலைவர் ஒப்புதல் அளித்தார். தி.மு.க. தலைவரின் சம்மதத்துடன் வெளியே நின்று ஆதரவளிப்பதாக சொல்லிவிட்டு போனவர்கள் ஒவ்வொருவராக த.வெ.க. மந்திரி சபையில் போய் அமர்ந்தது மட்டுமல்லாமல் தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளியேறும் முடிவையும் அறிவித்தார்கள். த.வெ.க. அரசை ஆதரித்தாலும் தி.மு.க. கூட்டணியில் தான் நீடிக்கிறோமென்று ஒரு நாள் சொல்லுவார்கள் மறு நாள் இப்போதுள்ள சூழலில் தி.மு.க. கூட்டணி யில் நீடிக்க முடியாது என்று கூறுவார்கள்.

திருமாவளவன் ஒருபடி மேலே போய் தாங்கள் அமைச்சரவையில் இடம்பெற்றுவிட்டதாலேயே தவெக கூட்டணியில் இருக்கிறோம் என்று பொருளல்ல என்கிறார். இவ்வ எவையும் எந்தத் தயக்கமும் இன்றிச் செய்துவிட்டு தி.மு.க. தலைவர் த.வெ.க.விடம் நெகிழ்வுத் தன்மையுடன் இருந்தாராம். அது திருமாவளனுக்கு அதிர்ச்சி அளித்ததாம். யாரை சந்தோசப்படுத்த இந்த அவதூறு திருமா அவர்களே? இதையெல்லாம் பார்த்து அதிர்ச்சியடைய வேண்டியது தி.மு.க.வே தவிர திருமாவளவன் அல்ல.

த.வெ.க. அரசை வெளியே இருந்து ஆதரிக்கப் போனவர்கள் உள்ளே போய் உட்கார்ந்துகொண்டு தி.மு.க. தலைவர் எங்களை தடுத்திருக்க வேண்டுமென்று சொன்னால் என்ன வகையான நிலைப்பாடு இது ?

"த.வெ.க.வின் சந்தேகத்தை போக்கத்தான் ஆட்சி அமைக்க ஆதரவு கொடுத்தோம். அதற்கு பரிசாக த.வெ.க. அமைச்சரவையில் எங்களுக்கு இடம் தரப்பட்டது." என்றால் இந்தக் கூட்டணி எத்தகைய பரஸ்பர நம்பிக்கையில் அமைந்திருக்கிறது? மந்திரி சபைக்குள் போனால்தான் தங்கள் கற்பை நிரூபிக்க முடியும் என்ற அவல நிலையில் விசிக இருந்ததா?

திருமாவளவன் தி.மு.க. தலைவர்பற்றி பதிவுசெய்யும் இன்னொரு கூற்றையும் பாருங்கள். "தி.மு.க., அ.தி.மு.க. இணைந்து ஆட்சியமைப்பது குறித்து ஒரு கருத்து நிலவுவதாக தி.மு.க. தலைவர் எங்களிடம் கூறினாரே தவிர. தி.மு.க., அ.தி.மு.க. இணைந்து ஆட்சியமைக்கலாம் என கூறவில்லை."

ஆனால் இதற்குமுன் 'தி.மு.க., அ.தி.மு.க. கூட்டணி பற்றி உங்களிடம் யாரும் பேசினார்களா என்று திருமாவி டம் கேட்டபோது 'தி.மு.க. தலைமையில் இருந்து அப்படி யாரும் பேசவில்லை. இரண்டாம் கட்டத் தலைவர்களி டையே அப்படி ஒரு பேச்சு அடிபடுவதாக கேள்விப்பட்டதாக' கூறுகிறார். இரண்டில் எது உண்மை? ஏன் இத்தனை தடுமாற்றங்கள் ?

மனுஷ்ய புத்திரன்
மாநில ஆலோசகர்
தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி

பொதுவாக அரசியல் தலைவர்கள் தனிப்பட்ட உரையாடல்களை மேற் கோள் காட்ட மாட்டார்கள். ஏனெனில் அதற்கு சான்றுகள் ஏதுமில்லை. அதோடு தனிப்பட்ட உரையாடலில் சொன்னதாக மனம்போன போக்கில் மாற்றி மாற்றி பேசிக் கொண்டே இருந்தால் நாளை எந்த தலைவரும் உரையாடவே அஞ்சுவார்கள். அது மிகப்பெரிய நம்பகத்தன்மையின்மையை ஏற்படுத்தும்.

விஜய், பா.ஜ.க. கூட்டணியிலிருக்கும் அ.தி.மு.க. ஆதரவை கோராமல் தி.மு.க. கூட்டணி கட்சிகளின் ஆதரவை கோரியதால் அவரது மதச்சார்பற்ற நிலையை ஆதரித்து தாங்கள் த.வெ.க.வை ஆதரித்ததாக திருமாவளவன் வியாக்கி யானம் கூறுகிறார். விஜய் மதச்சார்பற்ற கட்சிகளின்மேல் அவ்வளவு நம்பிக்கை கொண்டிருந்தால் எல்லா கட்சித் தலைவர்களையும் போய் பார்க்கும்போது அ.தி.மு.க.வின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமியை தவிர்த்துவிட்டு அங்கே கலகம் செய்துவரும் எஸ்.பி.வேலுமணியை ஏன் போய் சந்தித்தார்? பா.ஜ.க. கூட்டணியிலிருந்து வென்ற அ.ம.மு.க. வேட்பாளரை ஏன் குதிரை பேரத்தில் வாங்கினார். வேலுமணி கோஷ்டி த.வெ.க. அரசிற்கு ஆதரவாக நம்பிக்கை வாக்கெடுப்பில் வாக்களித்தது மும் நான்கு அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பதவியை ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க.வில் போய் இணைந்ததும் எந்த மதச்சார்பின்மையை வலுப்படுத்த ?

திருமாவளவன் அவர்கள் அதிகாரத்தில் பங்கேற்க விரும்புவதில் தவறில்லை. ஆனால் ஒரு மந்திரி சபை இடத்திற்காக த.வெ.க.விற்கு தகுதியற்ற சான்றிதழ்களை வழங்குவதும் வந்தே மாதரத்தில் தொடங்கி ஊரக வேலை வாய்ப்பு திட்டம் வரை ஒன்றிய அரசிடம் ஒடுங்கிப்போய் நிற்கும் த.வெ.க. அரசின் தோல்விகளுக்கு முட்டுக்கொடுப் பதும் பரிதாபகரமானது.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி என்ற எல்லையைத் தாண்டியும் அனைத்து தரப்பு மக்களின் மதிப்பை பெற்றவர் திருமாவளவன். ஆனால் இன்று த.வெ.க. தமது பாசிச கோர முகத்தை மறைக்க திருமாவளவனையும் இடதுசாரிகளையும் ஒரு முகமூடியாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. திருமாவளவனுக்கோ இடதுசாரி தலைவர்களுக்கோ தாங்கள் எதை இழந்து கொண்டிருக்கிறோம் என்பதைப்பற்றி எந்தக் கவலையும் இல்லை.

திருமாவளவன் அவர்கள் 'நாங்கள் எந்த நேரத்திலும் த.வெ.க. அமைச்சரவையில் இருந்து வெளியேறுவோம் என்கிறார். திருத்திக் கொள்ளுங்கள் நீங்கள் எந்த நேரத்திலும் த.வெ.க. அமைச்சரவையில் இருந்து வெளியேற்றப்படலாம். உங்கள் கூற்று உங்கள் நிச்சயமின்மையையே வெளிப்படுத்துகிறது.

ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், எப்போதுவென்றான் ஊராட்சி, கழுகாசலபுரம் கிராமத்தில் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்துவது குறித்து இன்றைய தினம் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் நேரடியாக சென்று ஆய்வு மேற்கொண்டு ஒரு மாதத்திற்குள் குடிநீர் சீரான முறையில் வழங்கிடவும்,சமுதாய நலக்கூடம் மற்றும் உடற்பயிற்சி கூடம் அமைத்திட நடவடிக்கை எடுப்பதாகவும் கிராம மக்களிடம் கூறினார்.நிகழ்வில் வட்டார வளர்ச்சி அலுவலர் வெங்கடாசலம், காசிவிஸ்வநாதன், ஒன்றிய பொறியாளர் சித்திரைசேகரன், எப்போதும்வென்றான் முத்துக்குமார், வெள்ளைச்சாமி, முத்துராஜ், ராதாகிருஷ்ணன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் துறை சார்ந்த அதிகாரிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

விருதுநகர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் இல்லத் திருமண விழா!

முன்னாள் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் – தங்கம் தென்னரசு வாழ்த்து!

விருதுநகர், ஜூன் 17 - விருதுநகர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் அவர்களின் இல்லத் திருமண விழாவில், ஏ.ஆர்.ஆர். கோவிந்தராஜ் - தமிழ்ச் செல்வி ஆகியோரின் புதல்வரான G. மனோஜ் பாஸ்கர்க்கும், சீனிவாசன் - ஜோதிலட்சுமி ஆகியோரின் புதல்வியுமாகிய S. பவித்ராவிற்கும் நாளை (18.06.2026 -வியாழக் கிழமை) காலை 7.35 மணி முதல் 9.00 மணிக்குள் விருதுநகர், இராமமூர்த்தி ரோட்டில் அமைந்துள்ள S.S.K. சரஸ்வதி கிராண்ட் திருமண மஹாலில் திருமண நடைபெற உள்ளது.

இத்திருமண விழாவில் திமுக கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் நல்லாசியுடன், எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துக்களுடன், விருதுநகர் தெற்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற உறுப்பினருமான கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், விருதுநகர் வடக்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற உறுப்பினருமான தங்கம் தென்னரசு ஆகியோர் வாழ்த்த உள்ளார்கள். இவ் விழாவில் பாராளுமன்ற, சட்டமன்ற, மாவட்ட நிர் வாகி கள், ஒன்றிய, நகர, கிளைக் கழக மற்றும் பல் வேறு அணியைச் சேர்ந்த உறுப்பினர்கள் கலந்து கொள்ள உள்ளார்கள்.

சிவகங்கை நகர் மன்ற உறுப்பினர் ஜெயகாந்தன் மகள் திருமணம்!

முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை!

சிவகங்கை, ஜூன் 17- சிவகங்கை நகர்மன்ற மாவட்ட பிரதிநிதி உறுப்பினர் சுப. ஜெயகாந்தன் சார்பு ஆய்வாளர் திருமதி தமிழ்ச்செல்வி. இவரது மகள் ஜெ.காளீஸ்வரி என்ற காவியாவிற்கும் சிவகங்கை மாவட்டம் கண்டாங்கி பட்டியை சேர்ந்த மு.க.முத்து ராஜா திருமதி ஹேமலதா ஆகியோர் மகன் மு. லோகேஷ் ஆகியோரது திருமணம் இன்று (17ஆம் தேதி - புதன்கிழமை) காலை 9.15 மணியிலிருந்து 10.15 மணிக்குள் சிவகங்கை

ராயல் மகாலில் நடை பெறுகிறது.

சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் கே. ஆர். பெரியகருப்பன் தலைமையில் திருமணம் மற்றும் வாழ்த்தரங்கம் நடைபெறு கிறது.

திருமணத்திற்கு முன்னாள் அமைச்சர்கள் ஆர். எஸ். ராஜகண்ணப்பன் எம்.எல்.ஏ. மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார், முன்னாள் எம்.எல்.ஏக்கள் வே. ராஜசேகரன், எஸ்.குணசேகரன், முன்னாள் ஒன்றிய இணைஅமைச்சர் இ.எம். சுதர்சன நாச்சியப்பன், முக்குலத் தோர் புலிப் படை தலைவர் நடிகர் சேது கருணாஸ், வழக்கறிஞர் சி.இளங்கோவன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சிவகங்கை நகர் கழக செயலாளரும் நகர் மன்றத் தலைவருமான சி.எம்.துரை.ஆனந்த் வரவேற்புரை ஆற்றுகிறார் . எம்.எல்.ஏ. மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார், முன்னாள் எம்.எல்.ஏக்கள் வே. ராஜசேகரன், எஸ்.குணசேகரன், முன்னாள் ஒன்றிய இணைஅமைச்சர் இ.எம். சுதர்சன நாச்சியப்பன், முக்குலத் தோர் புலிப் படை தலைவர் நடிகர் சேது கருணாஸ், வழக்கறிஞர் சி.இளங்கோவன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சிவகங்கை நகர் கழக செயலாளரும் நகர் மன்றத் தலைவருமான சி.எம்.துரை.ஆனந்த் வரவேற்புரை ஆற்றுகிறார் . மணவிழாவில் மணமக்களை வாழ்த்தி மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், பல் வேறு அரசியல் கட்சி பிர முகர்கள் வாழ்த்துரை வழங்குகிறார்கள். நகர் மன்ற உறுப்பினர் மாவட்ட திட்டக் குழு உறுப்பினர் வீனஸ் ராம நாதன் நன்றி கூறுகிறார்.

திருமணவிழா ஏற்பா டுகளை சுப.ஜெயகாந் தன், சார்பு ஆய்வாளர் திருமதி ஜெ.தமிழ் செல்வி, ஜெய.ஹரீஸ்மணிகண்டன் மற்றும் மண மகள் வீட்டார் செய்து வருகிறார்கள்.

"தமிழ்நாட்டில் எத்தனை பாலியல் வன்கொடுமைகள்?"

பதற வைக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் மக்கள்!

மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. கண்டனம்!

சென்னை, ஜூன் 17 - மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து வெளிவரும் பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான பாலியல் வன்கொடுமைச் சம்பவங்கள் ஒட்டுமொத்த சமூகத்தையும் அதிர்ச்சியிலும் அச்சத்திலும் ஆழ்த்தியுள்ளன.

நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் சென்னை, கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர், தாம்பரம், பூவிருந்த வல்லி உள்ளிட்ட பகுதிகளில் குழந்தை களுக்கு எதிராக நடைபெற்றுள்ள கொடூரச் சம்பவங்கள், தமிழகத்தின் சட்டம்ஒழுங்கு நிலைமை குறித்து மிகுந்த கவலைக்குரிய கேள்விகளை எழுப்புகின்றன.

"தமிழ்நாட்டில் இன்று எத்தனை பாலியல் வன்கொடுமைகள் நடைபெறுள்ளன?" என்று மக்கள் வேதனையுடனும் பதற்றத்துடனும் கேட்கும் சூழல் உருவாகியுள்ளது.

வளர்ச்சி, முதலீடு, தொழில்நுட்ப முன்னேற்றம் என பெருமையாகப் பேசப்படும் தமிழகத்தில், பெண்களும் பெண் குழந்தைகளும் பாதுகாப்பற்ற சூழலில் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பது மிகுந்த வேதனையளிக்கிறது.

போக்சோ சட்டத்தின் கீழ் தொடர்ந்து அதிகரித்து வரும் வழக்குகள், சமூகத்தின் ஒழுக்கச் சீரழிவை மட்டுமல்லாது, குற்றங்களைத் தடுக்க வேண்டிய பாதுகாப்பு அமைப்புகளின் செயல்திறனையும் கேள்விக் குறியாக்கு கின்றன.

குற்றவாளிகள் தண்டனைக்கு அஞ்சாமல் செயல்படுகின்றனர் என்ற உணர்வு மக்களிடையே பரவி வருகிறது.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு என்பது எந்த அரசுக்கும் முதன்மை பொறுப்பாகும்.

"சிங்கப்பெண்" போன்ற திட்டங்களை அரசு மிகுந்த விளம்பரத்துடன் அறிவித்திருந்தாலும், பெண்களும் குழந்தைகளும் அச்சமின்றி வாழும் சூழல் புதிய ஆட்சி

யில் உருவாகாதது கவலைக்குரியது.

குற்றங்கள் நடந்த பின் நடவடிக்கை எடுப்பதை விட, அவை நடைபெறாத சூழலை உருவாக்குவதே அரசின் உண்மையான கடமையாகும். பள்ளிகள், பொதுஇடங்கள், போக்குவரத்து மையங்கள் உள்ளிட்ட இடங்களில் கண்காணிப்பை பலப்படுத்துவதுடன், பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வும் தீவிரப்படுத்தப்பட வேண்டும்.

★ஒரு நாகரிகமான சமூகத்தின் உண்மையான அளவுகோல் அதன் பெண்களும் குழந்தைகளும் எவ்வளவு பாதுகாப்பாக வாழ்கிறார்கள் என்பதில்தான் இருக்கிறது. அந்த அடிப்படை பொறுப்பை நிறைவேற்றுவதில் அரசு தோல்வியடையக் கூடாது.

பெண்கள் அச்சமின்றி வாழவும், குழந்தைகள் பாதுகாப்பாக வளரவும் முடியாத சூழல் நீடித்தால், அது எந்த அரசுக்கும் பெருமை அல்ல; அந்த அரசின் மிகப்பெரிய தோல்வியாகவே வரலாறு பதிவு செய்யும் என்று அவர்கூறியுள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

நெல்லை கணபதி ராமசுப்பையா
ஜூன் 17 (2006)



கழகத்தில் துவக்கக் காலந்தொட்டு உறுப்பினராக இருந்தவர். மாணவப் பருவத்திலிருந்தே திராவிட இயக்க உணர்வுடன் இந்தி எதிர்ப்பு, கம்யூனல் ஜி.ஓ. ரத்து, கருப்புக்கொடி, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, தேவிகுளம் பீர்மேடு மீட்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் ஈடுபட்டு சிறை சென்றவர்.

மாணவர் தி.மு.க. சார்பில் நடைபெற்ற மாநாடுகளில் அமைப்பாளராக சிறப்புற பணியாற்றியவர்.

தனது நெருங்கிய நண்பர் பண்ருட்டி ராமச்சந்திரன் கழகத்திற்கு துரோகம் செய்து, கழகத்தைவிட்டு வெளியேறியபோதும் 'தனது தலைவர் கலைஞர்தான்' என்று தொடர்ந்து கழகத்தில் பணியாற்றியவர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக செனட் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.